**தமன பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தமன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த அறிக்கையின் நிதிக் கூற்று கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன் சம்பந்தமான பொறுப்பு நிருவகிக்கும் தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடட்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச அபிவிருத்தி துணை செயற்திட்டத்தின் (PT-02) கீழ் மீளாய்வாண்டின் போது பிரதேச சபையினால் கொள்வனவு செய்த ரூபா 14,592,000 தொகையான தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரண இருப்பு மூலதனமாக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். 04 ஆம் இலக்க 2024-05-13 ஆந் திகதிய நாட்குறிப்பின் மூலம் தற்பொழுது உரிய பெறுமதி மூலதனமாக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | கிராமிய செயற்திட்ட அபிவிருத்தி நிலையத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான முதலாவது விலைப்பட்டியலில் நிறுத்திவைத்தல் பணம் ரூபா 387,936 நிர்மாண வேலை கடன்கொடுத்தோரின் கீழ் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | அப்பணத்தை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய அறிவித்தல் பலகை வருமானம் ரூபா 148,575 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவித்தல் பலகைகளுக்கான நிலுவையாக இருந்த மீதிகள் ஆவணப்படுத்தப்படாததனால் 2023 ஆம் ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய பணம் | நிலுவை வருமானத்தை அடையாளங்கண்டு ஆவணப்படுத்தி சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்கீடு செய்யப்படவில்லை. | |
| (ஈ) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட அச்சு இயந்திரத்தின் (Epson dot printer LQ-310) பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த நூல் நிலையப் புத்தகங்களின் பெறுமதி அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கிறேன். அவற்றினை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் போது தேறிய காசு அசைவிற்கு ஆண்டின் ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளையும் சேர்த்துக்கொண்டதன் பின்னர் பெறுமதி ரூபா 21,514,588 மறைப்பெறுமதியாக இருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளினதும் பெறுமதி ரூபா 3,553,365 ஆக இருந்ததனால் அவற்றிற்கிடையே ரூபா 25,067,953 இணக்கமின்மை காணப்பட்டது. | ஏற்றுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பரீட்சித்து உரிய பிழையை சரிசெய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப் பாய்ச்சல் கூற்றினை சரியாக தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை**

| | விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூல சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இயந்திரங்களும் உபகரணங்களும் | 98,500 | (i) பட்டோலை<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2010 ஆம் ஆண்டிற்கு முன்பிலிருந்து முன்கொண்டு வந்த இப்பெறுமதி தொடர்பான தகவல் எதுவும் இருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் | 23,655 | | | |
| (இ) | தளபாடங்களும் பொருத்திகளும் | 788,214 | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | கைவிடப்பட்ட கட்டிடங்களைப் பராமரித்தல் | 62,468 | (i) பட்டோலை (ii) பதிவேடு (iii) மீதிகளின் உறுதிப்ப டுத்தல் | -மேற்படி- | -மேற்படி- |
| (உ) | நிலுவையான ஏக்கர் வரி | 230,850 | | | |
| (ஊ) | நிலுவையான வியாபார அனுமதிப்பத்திரம் | 83,750 | | | |
| (எ) | நிலுவையான ஏனைய வருமானம் | 1,415 | | | |
| (ஏ) | நிலையான வைப்புக்களில் உள்ள ஊழியர் பிணைப் பணம் | 1,456 | | | |
| (ஐ) | கேள்வி வைப்புக்கள் | 482,623 | (i) செலுத்த வேண்டிய தரப்பினர்களுட னான பட்டோலை (ii) மீதிகளின் உறுதிப்படுத்த ல்கள் | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | ஒப்பந்தக்காரர்களின் வைப்புக்கள் | 1,585,740 | | | |
| (ஓ) | நானாவித வைப்புக்கள் | 935,986 | | | |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (EPF) அதிகாரச்சட்டம் மற்றும் 1980 ஊழியர் | மொத்த சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் கணிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் தொடக்க சம்பளத்தை அடிப்படையாகக் | இப்பிழைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் 2024 பெப்ரவரி மாதத்திலிருந்து இதனை சரிசெய்து மொத்தச் | அதிகாரச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (ETF) அதிகாரச் சட்டம் | கொண்டு பங்களிப்பு பணத்தை கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டு தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 180,744 மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ரூபா 27,111 குறைத்து கணிப்பீடு செய்து நிதியங்களுக்கு பணம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது | சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு பங்களிப்பு பணம் அறவிடப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | | 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிருவாகமும்) விதி | | | |
| | (i) | 5(12) ஆம் விதி | நிதி மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்பு வகிக்கின்ற உத்தியோகத்தர்களிடமி ருந்து போதியளவு பிணைப்பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைப் பணத்தினை வைப்புச் செய்வது சம்பந்தமாக பொருத்தமான வகையில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மற்றும் நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | 32 ஆம் பிரிவு | பீ.எஸ் 23 படிவத்திற்கு இணங்க வீத வரிப் பதிவேடானது வீதவரி செலுத்த வேண்டிய அனைத்து கட்டிடங்கள் மற்றும் காணிகளுக்காக பேணப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் வீதவரியினை கணனியில் பதிவுசெய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் அதற்காக பதிவேடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . | 2024 ஆம் ஆண்டிலிருந்து PS 23 படிவத்திற்கு இணங்க வீத வரிப் பதிவேட்டினைப் பேணுவதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணனிமயப்படு த்தப்பட்ட முறைமைக்கு நேரொத்த வகையில் வீதவரிப் பதிவேட்டினை பேணுதல் வேண்டும். |
| | (iii) | 59 மற்றும் 57 ஆம் விதிகள் | ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் சபையின் வருமான பரிசோதகர் அல்லது அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தரினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற வணிக வியாபார மற்றும் கைத்தொழில் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டு மார்ச் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டு | ஏற்றுக்கொள்ளப்படு வதுடன் ஒரு வருமான பரீட்சகர் மூன்று ஆண்டுகள் காலமாக இல்லாதிருக்கின்ற மை இதற்கு காரணமாகும். | நிதி மற்றும் நிருவாக விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| | (iv) | 218 ஆம் விதி | சபையின் அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு தடவையேனும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் காணி கட்டிடங்களை பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| | (i) | திறைசேரி செயலாளரின் 01/2020 ஆம் இலக்க 2022 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய அரசாங்க நிதி சுற்றறிக்கையினால் திருத்திய நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | ஏதாவது ஒரு விசேட செயற்பாட்டிற்காக பதவிநிலை உத்தியோகத்தருக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 உச்ச அளவு வரை குறித்த செயலுக்கான உப கட்டுநிதி வழங்கப்படலாம் என்ற போதிலும் தமன பிரதேச சபையின் பதவி நிலை தரம் இல்லாத ஒரு உத்தியோகத்தருக்கு எல்லையினை மிகைத்து ரூபா 150,000 முற்பணம் 2023 ஒக்தோபர் 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். இம்முற்பணம் LDSP செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது எனவும் அது மீண்டும் மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளது எனவும் மேலும் தெரிவிக்கிறேன். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் முற்பணங்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 571 | மீய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்பு பட்டோலையின் பிரகாரம் செலுத்த வேண்டிய தரப்பினர்கள் அடையாளங் காணப்படாத ரூபா 3,004,349 கேள்விகள், ஒப்பந்தங்கள் மற்றும் நானாவித வைப்பு மீதிகள் மற்றும் வைப்புச் செய்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலத்தை மிகைத்த வைப்பு மீதிகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கிறேன். எதிர்காலத்தில் இம்மீதிகள் சம்பந்தமாக நி.பி 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 4,766,125 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 2,344,297 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீத வரியும் வரியும் | 770,900 | 797,578 | 850,683 | 1,746,621 | 720,907 | 815,706 | 494,264 | 1,799,725 |
| ii. | வாடகை | 4,912,500 | 5,485,829 | 4,709,536 | 2,653,016 | 3,585,000 | 1,914,501 | 854,593 | 1,876,723 |
| iii. | அனுமதிப்பத்திர கட்டணம் | 1,712,500 | 1,052,900 | 1,052,900 | 83,750 | 1,020,000 | 446,850 | 446,850 | 83,750 |
| iv. | ஏனைய வருமானம் | 1,175,000 | 1,270,523 | 1,270,523 | - | 2,970,400 | 2,544,562 | 2,544,562 | - |
| மொத்தம் | | 8,570,900 | 8,606,830 | 7,883,642 | 4,483.387 | 8,296,307 | 5,721,619 | 4,340,269 | 3,760.198 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய வீதவரி நிலுவை ரூபா 1,515,770 ஆக இருந்ததுடன் அது வருடாந்த மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 420,907 இனைப் போல மூன்று மடங்கு அதிக தொகையாகும். | 03 வருமான நிருவாக பதவிகள் தற்பொழுது மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது. சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு முடியாமைக்கு அது பிரதான காரணமாக இருந்ததுடன் இதனை ஆண்டின் போது பதில் கடமை பார்க்கும் வருமான பரீட்சகரின் மூலம் வீத வரியினைச் | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தினை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | சேகரித்தலினை அதிகரிப்பதற்கு மற்றும் நிலுவையான வீத வரியினை அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான கடை வாடகை ரூபா 2,653,016 ஆக இருந்ததுடன் அந்த மீதியானது 01 தொடக்கம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய 42 கடன் மீதிகளை உள்ளடக்கியிருந்தன. | ஒரு வருமான பரிசோதகர் மூன்று ஆண்டுகள் காலமாக இல்லாதிருந்தமை நேரடியாக தாக்கமளித்துள்ளது. | நிலுவைப் பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப நியதிச்சட்டம் விதிக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்களையும் அடையாளங்கண்டு உப நியதிச்சட்டம் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 05 உப நியதிச்சட்டங்கள் மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. | உப நியதிச்சட்டங்களை விதிக்கும் நடவடிக்கையை சட்டமாக்குதல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்படாத நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| பிரதேச சபையின் முன்னாள் செயலாளரினால் 2022 மே 09 ஆந் தகிதி சபையின் கெப் வாகனம் உள்ளூராட்சி ஆணையாளரின் முன் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது கொழும்பில் நடைபெற்ற கூட்டத்திற்குப் பங்குபற்றி திரும்பி வரும் போது குழப்பமான சம்பவத்திற்கு முகங்கொடுத்து கெப் வாகனம் தாக்கப்பட்டு தீ வைக்கப்பட்டதன் காரணமாக கெப் வாகனம் முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் சமர்ப்பித்த தொடக்க அறிக்கைக்கு இணங்க வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 8,500,000 ஆக இருந்த போதிலும் காப்புறுதி இழப்பீடாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் ரூபா 5,000,000 ஆக இருந்ததனால் பிரதேச சபைக்கு ரூபா 3,500,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் முறையான பரீட்சிப்பினை நடாத்தி சிபாரிசுகள் அமுல்ப்படுத்தாது மீளாய்வாண்டின் போது கெப் வாகனத்தின் பெறுமதியும் ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கிறேன். தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முறையான பரீட்சிப்புக்களை நடாத்தி அதன் சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்கும் அங்கீகாரத்தினைப் பெற்று பெறுமதியை ஏடுகளிலிருந்து நீக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையினால் மாதாந்தம் 850 கிலோகிராம் உக்குகின்ற கழிவுப் பொருட்களும் 150 கிலோ கிராம் உக்காத கழிவுப் பொருட்களுமாக 2023 ஆம் ஆண்டின் போது 12,000 கிலோகிராம் கழிவுப் பொருட்கள் ரூபா 6,954,018 செலவு செய்து சேகரிக்கப்பட்டிருந்ததுடன் உக்குகின்ற கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி 2023 ஆம் ஆண்டின் போது 1,641 கிலோகிராம் சேதனப் பசளை தயாரிக்கப்பட்டு 1,525 கிலோ கிராம் விற்பனை செய்யப்பட்டதன் மூலம் ரூபா 30,500 வருமானம் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | கழிவுப் பொருட்களை சேகரிக்கும் செலவுகளை குறைத்து சேதனப் பசளைகளின் விற்பனையை அதிகரித்து வருமானத்தினை அதிகரிக்கச் செய்வதற்காக எங்களால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சேதனப் பசளை தயாரிப்பு மற்றும் விற்பனையை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | வரையறுத்த ஹிங்குரான சீனிக் கம்பனிக்குச் சொந்தமான 186 அலகு ஆதனங்கள் தொடர்பாக தற்பொழுது குடியிருக்கின்ற குடியிருப்பாளர்கள் மற்றும் வரையறுத்த கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி ஆகிய இரு தரப்பினர்களால் வீதவரிப்பணம் செலுத்தப்படுகின்றது என அவதானிக்கப்பட்டதுடன் இதன் காரணமாக 2019 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டு வரையான காலம் தொடர்பாக மிகையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 180,335 வீதவரி வருமானம் வைப்புக் கணக்கில் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க ஒரே ஆதன அலகிற்காக சட்டரீதியற்ற வகையில் இரண்டு தரப்பினர்களால் வீதவரிப் பணம் அறவிடப்பட்டிருந்தது. | நிச்சயமாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாமையின் காரணமாக அந்த வீடுகளில் குடியிருப்பவர்கள் மற்றும் வரையறுத்த கல்ஓயா பெருந்தோட்ட (தனியார்) கம்பனி ஆகிய இரண்டு தரப்பினர்களிடமிருந்தும் வீதவரியினை அறவீடு செய்தல் இடம்பெற்றுள்ளது. 2024 ஆம் ஆண்டின் போது புதிய மதிப்பீட்டினைப் பெற்றுக்கொண்டதன் பின்னரேனும் அப்பிழையை சரிசெய்வதற்கு முடியலாம் என எதிர்பார்க்கிறேன். | அறவிடப்பட வேண்டிய தரப்பினர்களை சரியாக அடையாளங்கண்டு வரியினை அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டின் போது பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் ஆதனங்களின் மீது 2007 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவிடப்பட்டிருந்ததுடன் காலரீதியாக அந்த ஆதனங்களை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் வீதவரியினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டிற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய சேவைக் கட்டணமும் தற்பொழுது எங்களால் செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | காலரீதியாக மதிப்பீடு செய்து வரிப் பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 3.5 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட 09 வாகனங்களை பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட வாகனங்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். | பொருத்தமான வகையில் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் 27 மயானங்கள், 10 விளையாட்டு மைதானங்கள் மற்றும் சபையின் கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகள் என்பவற்றின் பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததனால் பெறுமதியை அடையாளங் காண முடியாதுள்ளது. எதிர்காலத்தில் அது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகளின் 05 விடயங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வாகன விடயங்களின் பெறுமதி தொடர்பாக எந்த ஆவணமும் சபையிடம் இல்லை. | -மேற்படி- |
| (இ) | சபையின் திருத்தம் செய்து பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படுகின்ற பெக்கோ லோடர் 2022 பெப்ரவரி 19 ஆந் திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்பட்டது. | சபையின் வருமான நிலைமைக்கு இணங்க எதிர்காலத்தில் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | துரிதமாக திருத்தம் செய்து பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | சபையின் பொறுப்பில் காணப்படுகின்ற 09 வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.7 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | LDSP (PT-02) செயற்திட்டத்தின் கீழ் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளை நடாத்துவதற்காக ஒரு நிறுவனத்தை தெரிவுசெய்யும் போது அதற்காக | 05 நிறுவனங்களில் ஒரு நிறுவனம் மாத்திரம் வருகை தந்து கலந்துரையாடப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட | சில நிறுவனம் தொடர்பான மதிப்பீட்டினை மேற்கொண்டு ஒரு |

| | | | |
|---|---|---|---|
| | தகமையுள்ள தரப்பினர்களுடனான ஒரு குழுவின் மூலம் தீர்மானம் எடுக்கப்படாமலும் தனியார் நிறுவனத்தின் அலுவலகம் தொடர்பாக எந்த மதிப்பீடும் செய்யப்படாமலும் ரூபா 17.3 மில்லியன் செலவு செய்து ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட இந்த ஆடைத் தொழிற்சாலைகளுக்காக ஒரு தனியார் நிறுவனம் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டது. | நிறுவனத்தின் பிரதான தையல் நிலையம் கௌரவ செயலாளரினால் அவதானிக்கப்பட்டது எனவும் செயலாளரிடமிருந்து பெற்ற ஆலோசனையின் பிரகாரம் உரிய நிறுவனம் தெரிவுசெய்யப்பட்டது. | போட்டி நிறுவனம் தெரிவுசெய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி துணைச் செயற்திட்ட பணிப்பாளரின் PL/LDSP/4/3/(Gen. File) ஆம் இலக்க 2023 சனவரி 31 ஆந் திகதிய கடிதத்தின் 3.2 ஆம் பந்தியின் பிரகாரம் விலை மனுக்களை கோரும் எல்லை ரூபா 18 மில்லியன் வரையான செயற்திட்டங்கள் தொடர்பாக பெறுகை சபையின் உள்ளடக்கமாக உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமைத்துவத்தில் மற்றும் உரிய உள்ளூராட்சி நிறுவனத்தின் தலைவர் அல்லது செயலாளர் மாவட்ட செயலகத்தின் ஒரு பிரதிநிதி ஏனைய உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் பிரதேச சபையினால் ரூபா 14,892,000 தொகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகைக்குழுவின் உள்ளடக்கத்தினை மாற்றம் செய்யும் குறிக்கோளில் ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட இரண்டு நிலையங்களுக்கு தனித்தனியாக பெறுகை ஆவணங்களைத் தயாரித்து ரூபா 09 மில்லியன் எல்லையின் கீழ் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனத்தின் செயலாளரின் தலைமைத்துவத்துடன் ஒரு பெறுகைக் குழு தெரிவுசெய்யப்பட்டு தையல் இயந்திரம் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. | எங்களால் 02 தையல் நிலையங்களினை 02 இடங்களில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க இரண்டு இடங்களுக்கு தனித்தனியாக விலை மனுக்கள் கோரப்படும். ஹிங்குரான மற்றும் மடவலந்த என்பனவாக இரண்டு நிலையங்களை ஆரம்பிப்பதற்கு தொடக்கத்தில் திட்டமிடப்பட்டிருந்தும் மடவலந்த நிலையத்தில் கட்டிடத்தினை திருத்தம் செய்வதற்காக செயற்திட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்ட பணம் போதியதல்லாததனால் ஹிங்குரான சபையின் இரண்டு பழைய கட்டிடங்களை நவீனமயப்படுத்தி அதில் இரண்டு நிலையங்களையும் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளுக்கு ஒரே வகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டதனால் ஒரு பெறுகை நடவடிக்கையாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | **பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.** | | |
| | (i) 2023 யூன் 26 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், பிரதேச சபைக்கு கொண்டு வந்து ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அம்பாறை பிராந்திய பொறியியல் அலுவலகத்தின் இயந்திர பொறியியலாளர், பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், பிரதேச சபையின் செயலாளர் ஆகிய தரப்பினர்களால் அப்பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க கிடைத்துள்ளது என சான்றுபடுத்தி பொறுப்பேற்கப்பட்டிருந்தது. தையல் | பொருட்களை வழங்கிய நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பொருட்களை ஒப்படைத்த சந்தர்ப்பத்தில் பொருட்களைப் பரீட்சிப்பதற்காக வருகை தந்திருந்ததுடன் எங்களால் அதற்காக இயந்திர பொறியியலாளரும் தொடர்புபடுத்தப்பட்டிருந்தார். | பொருள்களைப் பொறுப்பேற்கும் குழுவிற்கு தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான அறிவினைக் கொண்ட தரப்பினர்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இயந்திரங்கள் சம்பந்தமாகவும் ஆடைத் தொழிற்சாலைகள் சம்பந்தமாகவும் அறிவினைக் கொண்டுள்ள தரப்பினர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் உள்ளடக்கப்பட்டிருக்காமையின் காரணமாக இப்பொருட்கள் நிர்ணயிக்கப்பட்ட பொருள் விபரத்திற்கு இணங்கியுள்ளதா என்பதனை பரீட்சிக்காது பொறுப்பேற்றிருந்ததன் காரணமாக கொள்வனவு செய்த பொருட்களில் பின்வருமாறு குறைபாடுகள் காணப்பட்டன. | | |
| • 18 தையல் இயந்திரங்கள் நிறப் புகைப்படத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியினை விட வேறு மாதிரியினைச் சார்ந்ததாக இருந்தது. | 5THD இயந்திரம் ஒன்றிற்குரிய பொருள் விபரத்துடனான ஒரு இயந்திரம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. 4THD இற்குச் சமமான பொருள் விபரத்திற்குரிய ஒரு இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. Button Attacher வேண்டப்பட்டுள்ள இயந்திரம் ஒரு பழைய மாதிரியிலான இயந்திரமாகும். நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ளதானது புதிய மாதிரியைச் சேர்ந்த இயந்திரமாகும். Button Hole Machine வேண்டப்பட்டதானது பழைய மாதிரியிலான இயந்திரமாகும். வழங்கப்பட்டது செயற்திறன் கூடிய இயந்திரம் மற்றும் இரண்டு Mini Boiler இயந்திரங்களின் மூலம் இடம் பெறுகின்ற செயற்பாடுகள் ஒரே சமமானவையாகும். | பொருட்களை வழங்கும் போது பெறுகைத் தீர்மானத்துடன் வித்தியாசம் ஏற்பட்டிருக்குமாகவிருந் தால் வழங்குனரினால் உரிய நிறுவனத்திற்குத் தெரிவித்து அதற்காக முன் இணக்கப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |
| • ஒன்று ரூபா 670,000 வீதம் கொள்வனவு செய்த Flatlock Hem Cutter Machine இரண்டில் ஒன்று பயன்படுத்திய பழைய இயந்திரமாக இருந்ததுடன் வழங்குனர் வழங்கிய 02 வகையைச் சேர்ந்த இரண்டு இயந்திரங்களும் ஒரே விலைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக இயந்திரம் கொள்வனவு செய்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டதாவது எங்களிடம் ஒரு வாரத்திற்குள் பொருட்கள் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அப்போது நிறுவனத்தின் காட்சிப்படுத்தல் நிலையத்தில் இருந்த பொருட்கள் வழங்கப்பட்டது என்பதாகும். | பெறுகைத் திர்மானத்திற்கு இணங்க கொள்வனவுமேற்கொள் ளப்படுதல் வேண்டும். |
| • ரூபா 1,000,000 செலவு செய்து பயன்படுத்தப்பட்ட பழைய Smoking Machine ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. | இந்த இயந்திரம் பயன்படுத்தப்படாத ஒரு இயந்திரம் எனவும் அது தாய்க் கிளையினாலேயே பரீட்சிப்பதற்காக நூல் இடப்பட்டு | பொருட்களை சபையினால் பொறுப்பேற்கும் போது அவற்றின் தரம் தொடர்பாக பரீட்சித்து |

| | | |
|---|---|---|
| | அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் பொருளை கொள்வனவு செய்த நிறுவவனம் குறிப்பிட்டிருந்தது. | பொறுப்பேற்றல் வேண்டும். |
| • ஒன்று ரூபா 400,000 வீதம் கொள்வனவு செய்த இரண்டு Mini boilers களில் ஒரு இயந்திரம் பயன்படுத்தப்பட்ட பழைய இயந்திரமாக இருந்ததுடன் கொள்னவு செய்த இரண்டு இயந்திரங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான இரண்டு மாதிரிகளைக் கொண்ட இயந்திரங்களாகும். | பழைய இயந்திரம் அல்லாது புதிய இயந்திரம் என பொருட்களை கொள்னவு செய்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. | பயன்படுத்தப்பட்ட பொருட்களை கொள்னவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| • ரூபா 340,000 பெறுமதியான 02 Iron Table கள் கொள்னவு செய்யப்பட்டதுடன் அவற்றில் ஒன்று பொருத்தப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அது பயன்படுத்தப்பட்ட Iron Table ஆகும். | Iron Table உரிய நிறுவனத்தினால் பொருத்தப்பட்டதன் பின்னரே ஒப்படைக்கப்படுகின்றன. | -மேற்படி- |
| • 06 Steam Iron களை கொள்னவு செய்வதற்காக ரூபா 117,000 பணம் செலுத்தப்பட்டிருந்தும் பௌதீக பரீட்சிப்பின் போது 04 Steam Iron கள் மாத்திரம் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டதனால் சபைக்கு ரூபா 39,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | 06 Steam Iron களுக்காக பட்டியல் இடப்பட்டுள்ளதனால் மிகுதியான 02 Steam Iron களின் 02 Steam பகுதிகளை எங்களுக்கு வழங்குவதற்கு பொருட்களை கொள்னவவு செய்த நிறுவனத்தினால் இணங்கி கொள்ளப்பட்டது. | பொறுப்பேற்ற பொருட்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| • LDSP செயற்திட்டத்தின் கீழ் 2023 யூன் 22 ஆந் திகதி காரைதீவு பிரதேச சபையின் மூலம் ஒரு கணனி கதிரை ரூபா 14,500 தொகைக்கு கொள்னவு செய்யப்பட்டிருந்ததுடன் தமன பிரதேச சபையின் மூலம் அந்த ஆண்டிலேயே 46 கதிரைகள் ஒன்று ரூபா 20,000 வீதம் மேலே குறிப்பிட்ட தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதற்கிணங்க ஒரே காலப்பகுதியில் அதிக விலை வித்தியாசத்துடன் கொள்வனவு செய்ததன் காரணமாக தமன பிரதேச சபைக்கு ரூபா 253,000 நட்டம் ஏற்பட்டிருந்தது. | தையல் இயந்திரங்களும் அதற்காக பயன்படுத்துகின்ற மேசைகள் மற்றும் கதிரைகளை ஒரே நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளல் ஆடைத் தொழிற்சாலைகளை நடாத்துபவர்களுக்கு மிகவும் இலகுவானது என்பதனால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டது. | விலைகள் தொடர்பாக கவனித்துப் பார்த்து கொள்னவு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ii) 2023 யூன் 26 ஆந் திகதி மேற்கூறிய பொருள் இருப்பு பிரதேச சபைக்கு ஒரு வாகனத்தில் கொண்டு வரப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஒரு வாகனத்தில் பொருட்கள் கொண்டு வரப்பட்டிருந்தும் இரண்டு நிலையங்களுக்கு பொருட்களை எடுத்துச்சென்ற செலவாக ரூபா 300,000 கொடுப்பனவு செய்ததன் காரணமாக ரூபா 150,000 பணம் போக்குவரத்துச் | விலை மனுக்களைச் சமர்ப்பிக்கும் போது இரண்டு நிலையங்களுக்கும் தனித்தனியாக பொருட்களுக்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கிணங்க இரண்டு நிலையங்களுக்கும் பொருட்களை எடுத்துச் செல்வதற்காக விலை மனுக்கள் தனித்தனியாக | ஒரே வாகனத்தில் பொருட்களை எடுத்துச் சென்றிருந்ததன் காரணமாக போக்குவரத்து வாடகை இரண்டு முறை செலுத்தாதிருத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செலவாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க இரண்டு நிலையங்களுக்கும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு தனித்தனியாக கொடுப்பனவு செய்யப்பட்டது. | |
| (iii) இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான கட்டிடங்களை நவீனமயப்படுத்துவதற்கான நிதி எற்பாடு இதுவரை கிடைக்காமையின் காரணமாக கொள்னவு செய்த பொருள் இருப்பு விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் பயன்படுத்தப்படாதிருந்தும் அவற்றின் உத்தரவாத காலம் 08 மாதங்கள் தற்பொழுது மிகைத்திருந்தது. | இச்செயற்திட்டத்தின் கட்டம் - I இன் கீழ் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கும் கட்டம் II இன் கீழ் கட்டிடங்களை திருத்தம் செய்வதற்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்களுக்காக பொர்ருட்களை வழங்கிய நிறுவனத்தினால் தையல் இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் 06 மாத உத்தரவாத காலம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டது. | கட்டிடங்களை நவீனமயப்படுத்தி தையல் இயந்திரங்களையும் உபகரணங்களையும் துரிதமாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.8 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீாய்வாண்டின் இறுதிவரை பிரதேச சபையில் 18 பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. | அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல சந்தர்ப்பங்களில் நாங்கள் வேண்டுகோள் விடுத்திருந்தும் இன்றுவரை வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133(1) இன் பிரகாரம் உள்ளக கணக்காய்வின் மூலம் நிறுவன செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கான சிபாரிசுகள் தயாரித்து அமுல்ப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அது சபையின் அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கும் வகையில் முறைப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வினை நடாத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிறுவன ரீதியான செயற்பாட்டு நடைமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் செயலாற்றலினை அதிகரிப்பதற்கான சிபாரிசுகளை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |

**4.2 கணக்காய்வுக் குழு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12 ஆந் திகதிய DMA/01-2019 ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டிகள் தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை ஸ்தாபித்து குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கான நடைமுறையினை ஆரம்பித்து கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக தேவையான நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு சபையினால் போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்களின் போது நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் அடைந்துகொள்வது சம்பந்தமாக அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான குறிகாட்டிகளை ஸ்தாபித்து அவற்றின் செயற்திறனை மதிப்பீடு செய்தல் வேண்டும். |